கடையக்குடி பகுதியில் சவுக்கு மரங்கள்.

*வினா எண். 545—திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தாலூகா கடையகுடி சமீபத்தில் உள்ள வெள்ளாற்று படுகையில் பயிரிடப்பட்ட சவுக்கு மரங்களை அப்புறப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தாலூகா கடையக்குடி கிராமத்திற்கும் புதுக்கோட்டை தாலூகா பிரசன்ன ரெகுநாதபுரம் கிராமத்திற்கும் நடுவே மேற்கு கிழக்காக ஓடும் வெள்ளாற்றின் இடையே அமையப்பெற்றுள்ள கவினாடு கிழக்கு கிராமம் ச.எ. 22/1/ல் உள்ள திட்டில் உள்ள சவுக்குப் பயிர்களை அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு முக்கிய காரணம் 1977ஆம் ஆண்டு ஏற்பட்ட புயலிலும் வெள்ளத்திலும்—அந்த நேரத்தில் ஆற்றின் பகுதியில் சவுக்கு மரங்கள் இருந்ததால், கடையக்குடி கிராமமே ஆற்றுவெள்ளத்தில் மூழ்கக் கூடிய நிலைமை ஏற்பட்டது. இது போன்று பல ஆற்றுப் படுகைகளிலும் மணல் மேடிட்டு இருப்பதால் சவுக்கு மரங்களை நடக்கூடிய நிலைமை இருந்து வருகிறது. ஆகவே ஒட்டுமொத்தமாக ஆற்றுப்படுகையில் எந்தவிதமான மரங்களையும் நடக்கூடாது என்று உத்தரவிடுமா ? அப்படியே நடப்பட்டிருந்தாலும் அவைகளை அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஆற்றுப் படுகையிலுள்ள கரைகளில் சவுக்கு மரங்களை வைப்பதன் மூலமாக கரைகளை பாதுகாத்துக் கொள்ளவும், வலுவாக இருப்பதற்கும் உபயோகமாக இருக்கும். ஆனால் இந்த விஷயத்தைப் பொறுத்த அளவில், ஆற்றின் நடுவே திட்டுப் பகுதியிருந்ததால் ஆறு இரு பாகமாக மாறி போகக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே தான் இதை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.